# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1857/10 - 2014 අප්‍රේල් මස 09 වැනි බදාදා - 2014.04.09

*1857/10 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 3 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஏப்பிறல் 09.

**அட்டவணை**

| *நிரல் I* | | | | *நிரல் II* |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1 | 10.06 | 1006.10 | உமியுடன் கூடிய அரிசி (நெல் அல்லது குற்றப்பெறாத) | ரூபா 5/= கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.20 | உமி அகற்றிய அரிசி (தவிடு நீக்காத அரிசி) | ரூபா 5/= கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.30 | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக் கப்பட்ட அரிசி, மெருகூட்டப்படாதவை, பளபளப்பாக்கப் பட்டவை அல்லது பளபளப்பாக்கப்படாதவை | ரூபா 5/= கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.40 | உடைத்த அரிசி | ரூபா 5/= கி. கிராம் ஒன்றுக்கு |

4- 90




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.